# நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்
# வெற்றிடங்கள்

நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். இந்த நிதியம் 19 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமைமிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ள அரச நிறுவனமாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் பதவிக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. முகாமைத்துவ உதவியாளர் - (MA 1-1) - தரம் III

**Management Assistant**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - i. சிங்களம் / தமிழ்
   - ii. ஆங்கில மொழி
   - iii. கணிதம்
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப நிலை - தேர்ச்சி பெற்ற, ஆரம்ப நிலை - அரைத் தேர்ச்சி, ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற வகுதியில் உள்ள பின்வரும் தகுதிகளைக் கொண்ட ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்

க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- i. சிங்களம் / தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

**ஏனையவை:**

மேற்கூறிய ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு :** **MA 1-1-2025** ரூபா [46,220 -10x540 -7x630 - 4x890 - 20x1,190 - 83,390]
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026-01-01ஆம் திகதி முதல் ரூபா 43,312.00 மற்றும் 2027-01-01ஆம் திகதி முதல் ரூபா 46,220.00)

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 2. வாடிக்கையாளர் பராமரிப்பு உதவியாளர் - (MA 1-1) - தரம் III

**Customer Care Assistant**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - i. சிங்களம் / தமிழ்
   - ii. ஆங்கில மொழி
   - iii. கணிதம்
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. வாடிக்கையாளர் பராமரிப்பைக் கையாளுதல்/ அழைப்பு நிலைய செயற்பாடுகளில் குறைந்தபட்சம் ஆறு மாதகால அனுபவம் விரும்பத்தக்கது.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப நிலை - தேர்ச்சி பெற்ற, ஆரம்ப நிலை - அரைத் தேர்ச்சி, ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற வகுதியில் உள்ள பின்வரும் தகுதிகளைக் கொண்ட ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - i. சிங்களம் / தமிழ்
   - ii. ஆங்கில மொழி
   - iii. கணிதம்
2. ஏனையவை:
   - i. மேற்கூறிய ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு : **MA 1-1-2025** ரூபா [46,220 -10x540 -7x630 - 4x890 - 20x1,190 - 83,390]
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026-01-01ஆம் திகதி முதல் ரூபா 43,312.00 மற்றும் 2027-01-01ஆம் திகதி முதல் ரூபா 46,220.00)

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 3. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் - (MA 2-1) - தரம் III

**IT Assistant**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையின் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு :** **MA 2-1-2025** ரூபா [50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 87,710]
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026-01-01ஆம் திகதி முதல் ரூபா 43,312.00 மற்றும் 2027-01-01ஆம் திகதி முதல் ரூபா 46,220.00)

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தர நியமனம் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

**நிபந்தனைகள்:**

சகல விண்ணப்பதாரர்களும்
- இலங்கை பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிக்க சட்டச்சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2026.02.05ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**